**ஜூலை – 14**

# TNPSC துளிகள்

- முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகலமான நீடிக்கப் பட்ட தாக்குதல் வரம்புடைய நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவு கலத்தின் (ERASR) பயன்பாட்டுச் சோதனைகள் ஆனது ஐஎன்எஸ் கவரட்டி கப்பலில் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- உள்ளாட்சித் தேர்தல்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 42 % இட ஒதுக்கீட்டை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு தெலுங்கானா அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த கப்பல் சார் சுற்றுலா சூழலை உருவாக்கச் செய்வதற்கான பாரத் பயணியர் கப்பல் திட்டத்தில் அதிகாரப்பூர்வமாக இணைந்த முதல் இந்திய மாநிலமாக குஜராத் மாறியுள்ளது.
- நகர்ப்புற ஏழைப் பெண்கள் எண்ணிமச் சேவை வழங்குநர்களாக மாறுவதற்காக என ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 'டிஜி-லட்சுமி' என்ற புதிய முக்கியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- புதுச்சேரி அரசானது, மொழி சார் தொழில்நுட்பம் மூலம் குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும், மற்ற அனைத்துப் பிராந்திய மொழிகள் மூலம் நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்கும் BHASHINI என்ற ஒரு திட்டத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- குஜராத் மாநிலத்தின் ஆனந்த் என்ற பகுதியில் அமைக்கப்பட உள்ள நாட்டின் முதல் கூட்டுறவுப் பல்கலைக் கழகமான திரிபுவன் சஹாகரி விஸ்வ வித்யாலயாவிற்கு மத்தியக் கூட்டுறவு அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.
- இந்தியத் தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) ஆனது, இந்தியாவில் ஸ்டார்லிங்க் Gen1 எனும் அதன் புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதை (LEO) செயற்கைக்கோள் செயற்கைக் கோள் தொகுப்பினை நிலைநிறுத்தி இயக்குவதற்கு ஸ்டார்லிங் நிறுவனத்திற்கு அங்கீகரித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தலைமையிடத்தினைக் கொண்டுள்ள உலக சுகாதாரப் புத்தாக்க மன்றம் (WHIF) ஆனது, மிகவும் மதிப்புமிக்க BRICS+ உற்பத்திச் செயற்குழுவில் இணைவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா மாநில அரசானது, 'சர்வஜனிக் கணேஷோத்சவ்' நிகழ்வினை மாநில விழாவாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- அசாம் மாநில அமைச்சரவையானது, அந்த மாநிலத்தில் மனித-யானை மோதலை எதிர்த்துப் போராடுவதற்கான 'கஜா மித்ரா' திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- உலக கிராமப்புற மேம்பாட்டுத் தினமானது, நிலையான மேம்பாட்டினை அடைவதில் கிராமப்புறங்களின் முக்கியப் பங்கை எடுத்துக்காட்டும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 06 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் நிலை 2025

- கலைஞர் கனவு இல்லம் (KKI) திட்டமானது, சில வாரங்களில் ஒரு லட்சம் வீடுகளை கட்டி முடித்து, ஒரு முக்கிய மைல்கல்லை எட்ட உள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட KKI திட்டமானது, ஆண்டுதோறும் ஒரு லட்சம்


வீடுகளைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளது.

- முந்தைய ஆண்டு, 2024-25 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக என சுமார் 3,039 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## PARAKH RS 2025




- ஒரு முழுமையான மேம்பாட்டிற்கான அறிவு சார் செயல்திறன் மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு - இராஷ்ட்ரிய சர்வேக்சன் (PARAKH RS) எனும் கணக்கெடுப்பானது, முன்னர் தேசிய சாதனை கணக்கெடுப்பு (NAS) என்று அழைக்கப்பட்டது.
- PARAKH RS ஆனது பின்வரும் பாடங்களில் செயல்திறனை மதிப்பிட்டது:
    - மொழி மற்றும் கணிதம் (வகுப்பு 3, 6 மற்றும் 9),
    - நம்மைச் சுற்றியுள்ள உலகம் (வகுப்பு 3 மற்றும் 6), மற்றும்
    - அறிவியல் மற்றும் சமூக அறிவியல் (வகுப்பு 9).
- பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம் மற்றும் கேரளா ஆகியவை 3 ஆம் வகுப்பில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாக உருவெடுத்தன.

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள சாஹேப்கஞ்ச் மற்றும் ஜம்மு காஷ்மீரில் உள்ள ரியாசி மற்றும் ரஜோரி ஆகியவை குறைந்த செயல்திறன் கொண்ட மாவட்டங்கள் ஆகும்.
- கேரளா, பஞ்சாப் மற்றும் தாத்ரா நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ ஆகியவை 6 ஆம் வகுப்பில் சிறந்த செயல்திறன் கொண்டவையாகும்.
- பஞ்சாப், கேரளா மற்றும் சண்டிகர் ஆகியவை 9 ஆம் வகுப்பில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாகும்.
- கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில், 3 ஆம் வகுப்பில் கணிதத்தில் மிகக் குறைந்த செயல்திறன் பதிவாகியுள்ளன.

## 227 GW திறன் அளவிலான் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் - இந்தியா


கடந்தப் பத்தாண்டுகளில் நிறுவப்பட்ட சூரிய மின் உற்பத்தி திறனில் இந்தியா 4,000 சதவீதம் அதிகரிப்பைக் கண்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப் படி இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 476 GW அளவினை எட்டியுள்ளது.

இதில், புதைபடிவ எரிபொருள் சாராத ஆதாரங்கள் தற்போது 235.7 GW (49 சதவீதம்) பங்கினைக் கொண்டுள்ளன.

இதில் 226.9 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சுமார் 8.8 GW அணுசக்தி ஆகியவை அடங்கும்.

2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW நிறுவப் பட்ட புதைபடிவம் சாராத எரிசக்தித் திறனை அடைவதற்கு இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.




## 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் பஞ்ச் சங்க்லாபா

- இரண்டு நாட்கள் அளவிலான மத்தியப் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாடு ஆனது குஜராத்தின் கெவாடியா நகரில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் போது, மத்தியக் கல்வி அமைச்சர் பஞ்ச் சங்கல்ப் / 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் ஐந்து வழிகாட்டும் கொள்கைகளை பல்கலைக்கழக தலைமைத்துவத்திற்கான செயல் திட்டமாக முன் வைத்தார்:

- அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான வளர்ந்து வரும் கல்வி,
- பல் துறை கல்வி,
- புதுமையான கல்வி,
- முழுமையான கற்றல், மற்றும்
- பாரதிய அறிவு சார் அமைப்புகள்





# சர்வதேசச் செய்திகள்

## கண்டங்களுக்கு இடையேயான ஒளியியல் கடிகார ஒப்பீடு

- உலகெங்கிலும் உள்ள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் வரலாற்றில் உலகின் மிகவும் பெரிய, நேரடியான கடிகார ஒப்பீட்டை நிறைவு செய்துள்ளனர்.
- இது ஸ்ட்ரோண்டியம்-87 (Sr), ய்ட்டர்பியம்-171 (Yb), இரண்டு நிலைகளில் ($Yb^+$ E2 மற்றும் $Yb^+$ E3) மின்னூட்டம் பெற்ற ய்ட்டர்பியம்-171 அயனிகள், மின்னூட்டம் பெற்ற ஸ்ட்ரோண்டியம்-88 ($Sr^+$), மற்றும் இண்டியம்-115 அயனிகள் ($In^+$) ஆகிய ஐந்து முக்கிய அணுக்களை அடிப்படையாகக் கொண்ட சுமார் 10 ஒளியியல் கடிகாரங்களை அதில் உள்ளடக்கியது.
- இந்தக் கடிகாரங்கள் ஆனது பின்லாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஐக்கியப் பேரரசு மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள ஆறு தேசிய அளவியல் நிறுவனங்களில் அமைந்திருந்தன.
- ஒரு வினாடியின் கால அளவானது, தற்போது சீசியம் (Cs) அணு கடிகாரங்களால் வரையறுக்கப் படுகிறது.
- சீரொளிக் கற்றையானது, சில பில்லியன்களில் ஒரு பங்கை வழங்க அல்லது பெற ஒரு வினாடியை அளவிடுவதற்காக இந்த சாதனங்களில் Cs அணுக்களால் வெளிப்படும் கதிர்வீச்சை 'கணக்கிடுகின்றன'.
- 2030 ஆம் ஆண்டில் உலகின் புதிய சீர் தர நேரமாக Cs வகை அணுக் கடிகாரங்களுக்கு மாற்றாக இந்த ஒளியிழைக் கடிகாரங்கள் அமையும் என்று அறிவியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.
- 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஒரு வினாடியின் வரையறையானது சராசரிச் சூரிய நாளில் 86,400 நாட்களில் ஒரு பங்காக இருந்தது.
- 1956 ஆம் ஆண்டில், ஒரு வினாடியானது 1900 ஆம் ஆண்டு ஜனவரி 0 முதல் பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுத்துக் கொண்ட நேரத்தில் 31,556,925.9747 நாளில்

ஒரு பங்காக மாறியது.

- Cs அணு கடிகாரம் ஆனது ஒவ்வொரு 300 மில்லியன் ஆண்டுகளுக்கும் ஒரு வினாடியை மட்டுமே இழக்கிறது.




## GBU-57 பதுங்கு குழி தாக்குதல் விமானங்கள்

- அமெரிக்க இராணுவமானது, முக்கியமாக ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் ஆகிய மூன்று முக்கிய ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது மிகத் துல்லியமான தாக்குதல்களை நடத்தியது.
- இந்தத் தாக்குதல்களின் முக்கிய அங்கமானது, GBU-57 பதுங்கு குழி வெடி குண்டுகளை வீசிய ரேடாருக்குப் புலப்படாத B-2 ஸ்பிரிட் குண்டுவீச்சு விமானங்களால் நடத்தப் பட்டது.
- 'ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்' என்ற ஒரு நடவடிக்கையின் கீழ் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ரேடாருக்குப் புலப்படாத B-2 ஸ்பிரிட் குண்டுவீச்சு விமானங்கள் ஆனது, ஃபோர்டோ தளத்தில் 30,000 பவுண்டு எடையுள்ள GBU-57 மாபெரும் ஆயுத ஊடுருவல் (MOP) 'பதுங்கு குழி வெடி' குண்டுகளை வீசின.
- இது GBU-57 MOP வெடிகுண்டுகளின் முதல் செயல்பாட்டுப் பயன்பாடாகும்.
- அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஆனது, சுமார் இரண்டு டஜன் டோமாஹாக் நிலம் சார் தாக்குதல் சீர் வேக எறிகணைகளை ஏவியது.
- B-2 என்பது நான்கு எஞ்சின்களால் இயக்கப்படும் இரட்டைத் திறன் கொண்ட பல் பயன்பாட்டு கனரக குண்டுவீச்சு விமானமாகும்.
- B-2 விமானத்தின் மிகவும் எளிதாக கண்டறிய முடியாத திறன் ஆனது குறைக்கப்பட்ட அகச்சிவப்பு, ஒலிசார், மின்காந்த, காட்சிப் புலம் மற்றும் ரேடார் அடையாளங்களின் கூட்டு அமைப்பிலிருந்து பெறப்படுகிறது.
- இது அதன் முன்னோடியான BLU-109 மற்றும் GBU-28 விமானத்தினை விட அதிக சக்தி வாய்ந்தது.
- USAF படையில் உள்ள B-2 ஸ்பிரிட் மட்டுமே 20.5 அடி, 30,000 பவுண்டு எடையுள்ள MOP வெடி குண்டினை பயன்படுத்தும் திறன் கொண்ட ஒரே விமானமாகும்.
- GBU-57 ஆனது வெடிப்பதற்கு முன்பு நிலத்தடியில் 200 அடி வரை ஊடுருவும் திறனைக் கொண்டுள்ளது.

- இரட்டைத் திறன் கொண்ட ஊடுருவிச் சென்று தாக்கும் திறன் கொண்ட ரேடாருக்குப் புலப்படாத குண்டுவீச்சு விமானமான அடுத்த தலைமுறை நுட்பத்திலான குண்டுவீச்சு விமானமான B-21 ரைடர் தற்போது உருவாக்க கட்டத்தில் உள்ளது.
- B-21 ஆனது B-2 விமானத்தினைப் போன்றது, ஆனால் தனித்துவமான குவிந்த முனை கொண்ட மையத்தைக் கொண்டுள்ளது.




## "ஆபத்தில் உள்ள" உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியல் 2025





- உலகப் பாரம்பரியக் குழுவானது, மடகாஸ்கர், எகிப்து மற்றும் லிபியாவில் உள்ள மூன்று ஆப்பிரிக்கப் பாரம்பரியத் தளங்களை யுனெஸ்கோ அமைப்பின் அழிந்து வரும் தளங்களின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- அந்தத் தளங்கள் மடகாஸ்கரில் உள்ள அட்சினானானாவின் மழைக் காடுகள், எகிப்தில் அபு மேனா மற்றும் லிபியாவில் உள்ள பழைய நகரம் ஆகியனவாகும்.
- உலகப் பாரம்பரியப் பட்டியலில், ஓர் இடத்தினைச் சேர்க்க வழி வகுத்த மதிப்புகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்தத் தகவல்களை வழங்குவதும், அந்த தளத்தைப்

பாதுகாப்பதற்கென சர்வதேசச் சமூகத்தை அணி திரட்டுவதும் ஆபத்து நிலையில் உள்ள தளங்கள் பட்டியலின் நோக்கமாகும்.

❖ இது யுனெஸ்கோ அமைப்பின் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை மிகவும் அதிளவில் பெறுவதற்கான உரிமை மூலம் அந்தத் தளம் பயனடைய உதவுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் மீன்வளத் துறை




❖ இந்தியா உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தியாளராக உள்ளது.

❖ உள்நாட்டு நீர் நிலைகள் சார்ந்த மீன்வளம் ஆனது மொத்த உற்பத்தியில் சுமார் 75% பங்கினைக் கொண்டுள்ளது.

❖ தேசிய மீன் உற்பத்தி ஆனது 104% அதிகரிப்பைக் கண்டுள்ளது.

❖ இது 2013-14 ஆம் நிதியாண்டில் இருந்த 95.79 லட்சம் டன்னிலிருந்து 2024-25 ஆம் நிதியாண்டில் 195 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

❖ இந்தியாவின் மீன் உற்பத்தியானது, 95.79 லட்சம் டன்னிலிருந்து 195 லட்சம் டன்னாக 11 ஆண்டுகளில் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 7வது எல்லைகள் அறிக்கை - UNEP


❖ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் (UNEP) Frontiers 2025: The Weight of Time என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

❖ இது தீவிர வானிலை நிகழ்வுகளுக்கு முதுநிலை எய்த உள்ள நபர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுவர் என்ற அதிகரித்து வரும் அபாயத்தினை எடுத்துக்காட்டுகிறது.

❖ சுமார் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களிடையே வெப்பம் தொடர்பான உயிரிழப்புகள் 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து 85% அதிகரித்துள்ளன.

❖ உலக வெப்பநிலையானது 2°C அதிகரித்தால், 2050 ஆம் ஆண்டிற்குள் உயிரிழப்புகள் 370% அதிகரிக்கக் கூடும்.

- உள்ளூர் சுற்றுப்புறங்கள் மற்றும் அணுகல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கான தீர்வாக '15 நிமிட நகர அணுகுமுறை' உத்தி பற்றி இந்த அறிக்கை கூறியது.




# மாநிலச் செய்திகள்

## சிறப்புப் பொதுப் பாதுகாப்பு சட்டம் 2024





- மகாராஷ்டிரா சட்டமன்றமானது, 2024 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா சிறப்புப் பொதுப் பாதுகாப்பு மசோதாவினை நிறைவேற்றியது.
- இது "இடதுசாரி தீவிரவாத அமைப்புகள் அல்லது இதே போன்றக் குழுக்களின் சட்ட விரோத நடவடிக்கைகளை" தடுப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இது சட்ட விரோத அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு 2 முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கும்.
- இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம், சத்தீஸ்கர், தெலுங்கானா, ஆந்திரப் பிரதேச மாநிலம் மற்றும் ஒடிசாவிற்கு அடுத்தபடியாக பொதுப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றும் ஐந்தாவது மாநிலமாக மகாராஷ்டிரா மாறும்.

## சக்மாவில் ஆளுநர் ஆட்சி

- மிசோரம் ஆளுநர், சக்மா தன்னாட்சி மாவட்டச் சபையில் (CADC) ஆளுநர் ஆட்சியை அறிவித்துள்ளார்.
- 2023 ஆம் ஆண்டிலிருந்து, CADC இரண்டு மாபெரும் கட்சித் தாவல்களையும் இரண்டு

நம்பிக்கையில்லா தீர்மானங்களையும் எதிர் கொண்டுள்ளது.

- 1972 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்ட CADC என்பது, அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையின் விதிகளின் கீழான ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- சக்மா வகை பழங்குடியினர் ஓர் இனம் சார் சிறுபான்மை குழுவாகும் என்பதோடு இது மிசோரமில் இரண்டாவது பெரிய இனம் சார் சமூகமாகும்.




# விளையாட்டுச் செய்திகள்

## FIFA தரவரிசை 2025




- உலகச் சாம்பியன் ஆன அர்ஜென்டினா அணி இதில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து, பிரேசில், போர்ச்சுகல், நெதர்லாந்து, பெல்ஜியம், ஜெர்மனி மற்றும் குரோஷியா ஆகியவை உள்ளன.
- இந்தியக் கால்பந்து அணியானது 133வது இடத்திற்கு சரிந்துள்ளது.
- இதில் இந்திய அணியானது கடைசியாக 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 135வது இடத்தைப் பிடித்த போது கடைசி தரவரிசையைப் பெற்றது.
- 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 94வது இடத்தினைப் பிடித்த போது இந்தியாவின் சிறந்தத் தரவரிசையைப் பெற்றது.

- 46 ஆசிய நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் ஜப்பான் முன்னணி இடத்தினை (17வது இடம்) பெற்ற நிலையில் இந்தியா 24வது இடத்தைப் பிடித்துள்ளது).

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★